# சிலுவைப்பாதை 2024




**இவன்.... உங்கள் அயலான்**
**ஏ சி டிசில்வா, புனித சூசையப்பர் பங்கு. வெலிங்டன் - ஊட்டி மறை மாவட்டம்.**
**தொடர்புக்கு :- கைபேசி 8825576373.**

**நான் எனதுநண்பன் என் இறைவன் என்று தொடர்ச்சியில் இந்த முக்கோண நட்பின் மதிப்பீடுகளைக் கல்வாரி வழியில் காண்பது எப்படி என்ற முயற்சியே.**

**வாருங்கள் அடையாளம் காண்போம். இலக்கை அடைவோம்**

## முன்னுரை

நான் - நீ (அயலான்) - நசரேயன் (இயேசு - இறைவன்)

தந்தை - மகன் ,- தூய ஆவி என்பது இறையியல் பரிணாமம்.
இயற்கை - உலகம் - மனிதன் என்பது படைப்பின் பரிணாமம்
தந்தை ,- தாய் - பிள்ளை என்பது உயிர் - உறவின் பரிணாமம்
நான் - நீ (அயலான்) - நசரேயன் (இயேசு - இறைவன் ) என்பது
மனித நேயத்தின் பரிணாமம்.

முதல் மூன்று நிலைகளில் நாம் ஒன்றும் செய்ய முடியாது, அவை நிரந்தரமானவை. நான்காவது பரிமாணமத்தில் இணைவதும், விலகி நிற்பதும் நமது சுதந்திரம். ஏனெனில் - நாம்தான் நடு மரக்கனியைச் சுவைத்தவர்கள் ஆயிற்றே!!!.

21ஆம் நூற்றாண்டில் மக்கள் மனம் அதிகமாகத் தேடும் இந்தச் சுதந்திர வாழ்க்கை மனிதத்தை எங்கு இழுத்துச் செல்கின்றது என்பது இன்றைய பெரும் கேள்வி. எது சுதந்திரம் என்று தெரியாமல் தனி மனிதன் மனம் போன போக்கில் மகிழ்ந்திருக்கத் துடிக்கின்றான். எல்லா நிலைகளிலும் - தனிமனிதச் சுதந்திரம் முன்னிலை வகிக்கின்றது.

இந்தத் தனிமனிதச் சுதந்திரம் பிரிக்கக் கூடாத “தந்தை ,- தாய் - பிள்ளை” என்ற “உயிர் - உறவின்” பரிணாமத்தை அசைத்துப் பார்ப்பதில் பலம் காட்டுகிறது. விளைவு, உயிரற்ற நிலைக்கு “மனிதம்” தள்ளப்படுகிறது. ஆம், இதில் ஐயமில்லை. தெரிந்தும் தெரியாமலும் தவறாகப் படரும் இந்தச் சுயநல ஆணிவேரை முளையிலேயே கிள்ளி எறிவோம். விரும்பி வேண்டித் தப்பாக இதை வளர்த்தால் நாம் தேடிச் செல்லும் சுயநலத்திற்கே தீமையை உண்டாக்கும் . அது மட்டுமின்றி இஃது அயலானைத் தீண்டும்போது உலகம் இதைக் குற்றம் எனக் கண்டு நம்மைத் தண்டிக்காமல் விடாது என்பதை மறக்க வேண்டாம்.

நான் - நீ - இறைவன் என்ற முக்கோண நட்பின் பரிணாமத்தில் இணைந்திருக்க ஒருவர் மற்றொருரின் கைகளைப் பற்றிக் கொள்வோம் இந்தப் பிணைப்பு நிலைத்து நிற்க இறைவனை அதன் அடித்தளமாகக் கொண்டு- உலகில் உயர்ந்து நிற்க, நமது இணைந்த கரங்களை உயர்த்துவோம

தொடரும் சிலுவை வழியின் 14 நிலைகளிலும் பல வாழ்வின் சத்தியங்கள் மறைந்திருக்கின்றன. இன்று இதிலிருந்து ஏதேனும் ஒரு சத்தியத்தை முன்னிலைப்படுத்தி நமது நட்பின் பரிணாமத்தின் தகுதியைச் சிலுவையோடு உரசிப் பார்ப்போம். உண்மை... தங்கமா?.. வெள்ளியா?.. அல்லது பித்தளையா ?... என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

இவன்.... உங்கள் அயலான்
ஏ சி டிசில்வா, புனித சூசையப்பர் பங்கு. வெலிங்டன் - ஊட்டி மறை மாவட்டம்.
தொடர்புக்கு :- கைபேசி 8825576373.

**1ம் நிலை ... திவ்ய இயேசுவே**

**ஒரு வார்த்தையால்
இறைமகன் சிலுவை மரணத்திற்கு
தீர்ப்பிடப் படுகின்றார்.**

**மனித நாக்குதான் வார்த்தைகளின் பிறப்பிடம். எலும்பில்லாத நாக்கு இரு புறம் கருக்குள்ள வாளைப் போன்றது. நாவை அடக்க யாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது; சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது.(யாக்கோபு 3:8)**

**யூதாஸ் இஸ்காரியோத்தின், "ரபிவாழ்க" என்ற ஒரு வாழ்த்தொலி இயேசுவிற்குச் சிலுவை மரணத்தை வழிகாட்டியது. (மத்தேயு 26:49) தலைமை குரு கயபாவின் இந்த வார்த்தைகள் தான், "ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது" என்று இயேசுவின் மரணத்தை வடிவமைத்து. (யோவான்18:14)ஆனால், பிலாத்துவின் வார்த்தைகள் மக்கள் கூட்டத்தின் முன் இயேசுவை, "இதோ! மனிதன்" என்று அடையாளப் படுத்தியது. (யோவான்19:5) இருந்தும்...பிலாத்துவின் முன் கூடிருந்த மக்கள் கூட்டம் “சிலுவையில் அறையும்" என்று இன்னும் உரக்கக் கத்தியதுதான் ; இயேசுவின் மரணத்தை உறுதி செய்தது.(மத்தேயு 27:23)**

**பாடுகளுக்கு முன் .... அதே இயேசுவின் வார்த்தைகள்தான் சென்ற இடமெல்லாம் நன்மைகளை மட்டும் செய்தது. அனைத்திற்கும் மேலாக ... மனம் திரும்பி வாருங்கள் விண்ணரசு நெருங்கி விட்டது என்ற அழைப்பைத் தந்தது... இறைவனை, அப்பா தந்தாய் என்று உறவோடு அழைக்கும் உரிமையையும் தந்தது...**

**வாருங்கள் நமது வார்த்தைகள்... இன்று நொடிப்பொழுதில் எங்கே? எப்படி? ஏன்ன வெளிப்படுகின்றன? அதன் பாதிப்புகள் என்ன?.... என்பதைத் இத்தருணத்தில் திரும்பிப் பார்ப்போம்....**

**1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, யாகவராயினும் நாக்காக்க என்ற எச்சரிக்கையை நினைவு கொள்வோம்.**

**செபம்:- இறைவா எங்கள் வார்த்தைகள் எங்களுக்கும் எங்களோடு பயணிக்கும் அனைவருக்கும் வாழ்வையும் வளத்தையும் வழிகாட்டுவதாக.**

**உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.**

2ம் நிலை. ..... திவ்ய இயேசுவே

ஒரு கட்டளை கடமையாக .
கடமைகள் சுமப்பதற்காக அல்ல செய்து முடிப்பதற்காகவே

இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு "மண்டை ஓட்டு இடம்" என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர்.(யோவான்19:17) சிலுவையைத் தாமே சுமப்பது இயேசுவிற்கு இறைச் சித்தமாக இருந்தது. மனுக்குலமீட்பு அவரது கடமையாக இருந்தது. எனவே அவரது பயணம் கல்வாரியை நோக்கித் தொடர்ந்தது.

மண்ணுலகில் மனிதனாகப் பிறந்து மரணிக்கும் வரை, அவர் அவர் கடமைகள் அவர்களோடு பயணிக்கின்றது. கடமைகளை முறைப்படி நிறைவேற்றுபவர்கள் மகிழ்வையும்; தவற விடுபவர்கள் வேதனையையும் சந்திப்பது மனித வாழ்வின் எதார்த்தம். மனிதர்களுக்கு உறவின் கட்டமைப்பிலும் உலகின் சமூக அமைப்பிலும் கடமைகள் கண் முன் நிற்கின்றன. இன்று, இயேசுவைப் போல் மரணத்தைச் சந்தித்துக் கடமையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் நமக்கு இல்லை. இருந்தும் - நமது கடமைகளை நாம் எவ்வாறு நிறைவேற்றுகின்றோம் என்பதே கேள்வி.

இன்றைய நவநாகரிக உலகில் அனாதை இல்லங்கள், சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகள், பெண்கள் காப்பகம், முதியோர் இல்லங்கள், என்று பெருகிக் கொண்டே இருப்பதன் காரணம் என்ன? ஏதோ ஒருவகையில் நமது கடமைகளை முழுமையாக நாம் செய்யாமல் விட்டதுதான் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள முடிகிறதா?.... நாம் உண்மைகளை உணர்ந்து கொள்ள, இன்று மீண்டும் அழைக்கப்படுகின்றோம். ஐயோ என்று உணர்ச்சிப் படாமல் கடமைகளுக்கு உயிர் கொடுப்போம் கடந்து செல்வோம் கல்வாரியை.

1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, நமது கடமைகளைக் கருத்தில் கொள்வோம்.

செபம்:- இறைவா எங்கள் கடமைகளைக் கவனத்துடனும் கண்ணியத்துடனும் நிறைவேற்றி நானும், என் அயலானும் உம்மில் மகிழ்ந்திருக்க அருள் தாரும்.

உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.

3ம் நிலை. ..... திவ்ய இயேசுவே

அறியாமையின் ... ஒரு தவறு...
கல்வாரிப்பயணத்தில். இயேசு முதல்முறை கீழே விழுகின்றார்.

அறியாமல் தனக்குத் தானேசெய்யும் பிழையான
செயல் தவறு என்று அழைக்கப்படும்.

இயேசு அன்று கீழே விழுந்தார். எப்படி விழுந்தார்? ஏன் விழுந்தார்? என்பதல்ல. கவனிக்கப்பட வேண்டியது. மாறாக, அவர் மீண்டும் எழுந்து தனது குறிக்கோளை நோக்கிப் பயணப்பட்டதுதான் சிறப்பாகக் கவனம் கொள்ள வேண்டிய ஒன்று.

நமது பயணத்தில் பல நேரங்களில் நாம் விழுந்து விடுகின்றோம். அநேகமாக ...."எனக்குத் தெரியும் ... நான் நன்மையானதைத் தான் செய்கின்றேன்"... என்ற எண்ணங்களே - நம்மைச் சில நேரங்களில் தவறாகப் பயணிக்கச் செய்கின்றன.

விவிலியத்தில் இயேசுவை வரவேற்ற லாசரின் சகோதரிகள் மார்த்தாள், மரியாள் - இருவரும் நம்மைப் போல் அவரவர்களுக்குத் தெரிந்த நன்மையானவற்றைச் செய்தனர். முடிவில், மரியாள் செய்தது சரி, அதுவே நல்ல பங்கு என்பதும் தெளிவாயிற்று. செவிக்கு உணவு இல்லாதபோது சிறுது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பது தமிழ்.

தவறிவிட்டோம் என்ற உணர்வு உண்டாகும்போது மீண்டும் அதைத் திருத்திக் கொள்வோம் என்ற உறுதியை உள்ளத்தில் இருத்திக் கொள்வோமாக. வீழ்ந்ததை விட எழுந்து செயல்படுவது சிறப்பு என்பது இயேசு கற்றுத் தருகின்ற பாடம்; நமக்குள் உயிரோடு இருக்க வேண்டும். வீழ்ந்தோம் என்ற வெட்கத்தை விட்டவர்களாக; துணிச்சலுடன் எழுந்து இமயமே இலக்கானாலும் பயணத்தைத் தொடரவேண்டும்.... ஆம் இனித் தொடர்வோம் .

1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக இறை மகனோடு நமது பயணம் தொடர பக்குவம் கொள்வோம் .

செபம்:- இறைவா, தவறுகள் எங்களைத் திருத்திக் கொள்வதற்காகத் தரப்படும் வாய்ப்புகள் என்பதை ஏற்றுக் கொள்ளவும், அத்தவறுகளை தயக்கமின்றி முளையிலேயே கிள்ளி எறியும் ஆற்றலையும் தாரும்.

உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களக வாழ அருள் தாரும்....

4ம்நிலை... திவ்ய இயேசுவே....

ஆறுதலும் ஆற்றலும் தந்த ஒரு சந்திப்பு.
தாயும் மகனும் சந்திக்கின்றனர்

அன்று பெத்தலகேம் முதல் எருசலேம் வரை தன் மகன் இயேசுவைக் கண்ட இடமெல்லாம், அவரைப் பற்றிக் கேட்ட பொழுதெல்லாம் மகிழ்ச்சியும் பெருமையும் பெற்ற மரியா; கல்வாரிக்கு - அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டிபோல் அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு, இழுத்துச் செல்லப்படுவதைக் கண்டபோது.... (எசாயா 53:7-8) அவள் பெற்றெடுத்த புதல்வருள் அவளுக்கு வழிகாட்டுவார் எவருமில்லை; அவள் வளர்த்துவிட்ட ஆண் மக்களுள் அவளுக்குக் கைகொடுப்பார் யாருமில்லை! என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார். உண்மை...( எசாயா 51:18)

ஆனால் இன்று கல்வாரியின் வார்த்தைப்படி மரியாவின் பிள்ளைகள் என்று பெருமை கொள்ளும் நாம் இருக்கும்போது, நமது சந்திப்புகள் என்ன சொல்கின்றன? செய்கின்றன? சிலுவை வழியில் இறை சித்தம் எனது பணி என்பதை இறைமகன் தன் பார்வையால் அன்னைக்கு உணர்த்தினார்... அன்னை மரியாவிற்கு அது ஆறுதலைத் தந்திருக்கும்.

21ம் நூற்றாண்டின் கார்ப்பரேட் நாகரீக சந்திப்புகளின் கலாச்சார வாழ்க்கையில் நமது சந்திப்புகள் இறை சித்தத்தின் அடிப்படையில் நடைபெறுகிறதா? அல்லது இருளின் ஆட்சிவலையில் சிக்கித் தவிக்கின்றதா? நொடி பொழுதில் உலகின் மறுமுனையில் உள்ளோரைக்கூட கண்டு அளாவி மகிழந்திட கைகளில் கைபேசி உண்டு, அதனை இணைக்கும் இணையதளமும் உண்டு. யோசிப்போம்... நமது சந்திப்புகள் அடையாளப் படுத்துவது இறை சித்தம் எனில் நாம் அன்னை மரியாளின் பிள்ளைகள் என்பதில் அர்த்தம் உண்டு.

எனவே குறைந்தபட்சம், தினம் காணும் மனிதருள்; ஏழைகளையும், உடல்நலம் அற்றவரையும், இன்னும் சிறப்பாக " ஒரு அன்பான வார்த்தைக்காக, பாசமிகு ஒரு பார்வைக்காக" காத்திருக்கும் நமக்குத் தெரிந்த / தெரியாத ஒருவரையாவது இவர்களும் மரியாளின் பிள்ளைகள் என்ற உணர்வோடு தினம் : அல்லது வாரம் : அல்லது மாதம் - ஒரு முறையாவது, நாம் ; இன்றைய 21ம் நூற்றாண்டின் இயேசுவாக- வாழ்கின்ற கிறிஸ்தவர்களாக அடுத்து இருக்கும் அயலானைச் சந்திக்க முடிவெடுப்போம்; மனம் தளராமல் முடிந்ததை செய்து முடிப்போம்.

1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, நமது சந்திப்புகள் இறைசித்தத்தில் நம்மை இணைக்கும் பாலமாக அமைய மன்றாடுவோம்.

செபம்:- இறைவா, அன்னை மரியாள் - இறைமகன் இயேசுவின் சந்திப்பு இறை சித்தத்தை அடையாளப் படுத்தியதுபோல் எனக்கும் என் அயலானுக்கும் ஏற்படும் சந்திப்புகள் இருந்திட அருள் தாரும்.

உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.

5ம் நிலை. ……. திவ்ய இயேசுவே…
ஒரு உதவி. …. உன்னாலும் முடியும்
சிரேன் ஊரானாகிய சீமோன் சிலுவையை சுமக்க உதவுகின்றார்.

அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்றுகொண்டிருந்தபோது சிரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப் பின் அதைச் சுமந்து கொண்டுபோகச் செய்தார்கள். லூக்கா 23:26 நல்லது . இயேசுவின் நினைவு மனித மனங்களில் நிழலாடும் வரை சீமோன் நிலையாக நினைவு கூறப்படுவார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் என்று மார்தட்டும் நம் ஒவ்வொருவர் மீதும் குழந்தையாக இருந்த போதே நமது விருப்பு, வெறுப்பின்றி இந்தச் சிலுவை வைக்கப்பட்டிருக்கின்றது;… ஆம், இந்த அற்புதமான இயேசுவின் கொள்கைகளின் அடையாச்சிலுவை திருமுழுக்கின் வழியாக ஆலயத்தில் திருஅவை சாட்சியாக நம் மீது வைக்கப்பட்டுள்ளது. … இயேசு - சீமோன் இவர்கள்மீது வைக்கப்பட்ட சிலுவை பாரமானது முட்களும் ஆணிகளும் நிறைந்தது மரத்தால் ஆனது இருந்தும், சீமோன் இயேசுவிற்கு உதவியாக அதைச் சுமந்தார்.

நம் மீது சுமத்தப்பட்ட சிலுவையோ பாரமானது அல்ல. மாறாக … அன்பால் ஆனது ஆணிகளும் முட்க்களும் கொண்டதல்ல. அரவணைக்கும் ஆற்றல் கொண்டது. மரத்தால் ஆனதல்ல … மன்னிப்பால் நெடுமரம் என நிற்பது இதை அறிந்தவர்களாக; இப்போதாவது இச்சிலுவையைச் சுமக்க முன்வருவோம்
இயேசுவிற்கு உதவிட சீமோன் மறு கேள்வியின்றி சிலுவையைச் சுமந்து நடந்தார் இன்று நானும் நீங்களும் கல்வாரிக்குப் பின் இயேசுவால் நமக்குத் தரப்பட்ட அவருடைய கொள்கைகளின் நிறைவான மனிதநேயம் நிறைந்த அந்த அன்பின், அரவணைப்பின், மன்னிப்பின் சிலுவையை உலகெங்கும் எடுத்துச் செல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

நாம் இச்சிலுவையை நமது தோள்களால் முழுமையாகச் சுமந்து நடக்க வேண்டும். நடக்கும்போது தடுமாற்றம் ஏற்படும் எனில் இதோ தோள்கொடுக்கும் தோழனாகச் சீமோனாக இயேசுவே நமது மனிதநேய சுமைக்கு,….. சுமை தாங்கியாக” வழியில் நிற்கின்றார். மனிதத்தை விசாலமாக விரைவாக விதைத்திட அவரைக் காண்போம் ,

1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, அவர் கரம் பற்றுவோம் ; அன்பின்வழி நடக்க உறுதி கொள்வோம்…

செபம்:- இறைவா, நீர் சுமந்ததோ பாரமான மரச்சிலுவை. உம்மால் எம்மீது சுமத்தப்பட்டதோ அன்பின் மனிதநேயச் சிலுவை, இரண்டின் வேறுபாடுகளைப் புரிந்து; மனிதநேயத்தை இரு கரம் கொண்டு தாங்கி நடந்திட அருள் தாரும்.
உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.

**6ம் நிலை..... திவ்ய இயேசுவே.......**

**(என்ன)....ஒரு தைரியம்.....**
**வெரோனிக்கா என்ற பெண் இயேசுவின் முகத்தைத் துடைக்கின்றாள்.**

**கல்வாரியை நோக்கிச் சிலுவையோடு இழுத்துச் செல்லப்படும் இயேசுவின் முகத்தை இதோ, விடிவெள்ளியெனத் தோன்றிய வெரோனிக்கா என்ற பெண் - வெண்துகிலால் துடைத் தெடுத்தாள். அன்றைய யூத சமுதாயத்தில், ஒரு பெண் - அதுவும் ஒரு சிறு பெண் பொதுநிலையில் இப்படி தண்டிக்கப்பட்ட ஒருவருக்கு ஒரு உதவி செய்வது என்பது நினைத்துக்கூட, பார்க்க இயலாத ஒருகாரியம்... ஆனால் அதை வெரோனிக்கா செய்து முடித்தாள்.**

**அப்படிச் செய்ய அவளிடம் என்ன இருந்தது? ஒன்றும் இருக்கவில்லை.... ஆனால்**
**1) பிறர்துன்பம் கண்டு இறங்கும் ஈரமுள்ள இரக்க உள்ளம்,**
**2) துடிப்பும் மன தைரியமும் கொண்ட துணிச்சல்.**
**3) செய் அல்லது செத்துமடி என்று நினைத்ததை செய்யும் ஆற்றல்,**

**இந்த மூன்று குணங்கள் இருந்தன. கிறிஸ்தவர்களாக வாழும் நம்மிடம் இந்தக் குணங்கள் இருக்க வேண்டும். ஆம், இருக்கின்றன. . ஆனால், "ஐயோ நான் இதைச் செய்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்" என்று நாம் நினைக்கின்றோமே அந்த நினைவு துளியும் வெரோனிக்களிடம் இருக்கவில்லை.**

**வாருங்கள் பிறர் என்ன நினைப்பார்கள் என்ற நினைவை நம்மிலிருந்து அகற்றுவோம். பாருங்கள், இயேசு நன்மையைச் செய்ய யார் என்ன நினைப்பார்கள் என நினைத்திருந்தால் இன்று இந்தச் சிலுவை பாதை நடந்திருக்காது.**

**ஜனத்தொகையில் முதல் நாடாக முன்னேறும் இந்தியாவிற்கு ஒரு அன்னைதெரேசா போதாது. எழுவோம், பிடிவாதத்துடன் நம்மைச் சுற்றி கட்டப்பட்டுள்ள பிறர் என்ன நினைப்பார்கள் என்ற போலியான தடுப்புச்சுவரை தகர்த்தெறிவோம். பிறர்சிநேக செயல்களுக்கு உயிர் கொடுப்போம். நானே உயிர் என்றவரின் உறவில் உரிமை கொள்வோம்.**

**1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, எனது இறைவன் என்ன நினைக்கிறார் நான் என்ன நினைத்துச் செயல்படுகின்றேன் எனத் தியானிப்போம்.**

**செபம்:- இறைவா, பிறர் என்ன சொல்வார்கள் என்ற எண்ணததைக் களைந்து, என் தேவரீர்... நீர் என்ன சொல்கின்றீர் என்பதை உணர்ந்தவர்களாக எமக்குள் உதவும், துடிப்புள்ள இதயத்தை உயிர் பெறச் செய்யும்.**

**உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக நாங்கள் மாறிட அருள்தாரும்.**

**7ம் நிலை ....... திவ்ய இயேசுவே......**

**ஒரு தப்பு .... தீர்ப்பைத் தேடுகிறது**
**ஆம்.....இறைமகன் இரண்டாம் முறை கீழே விழுகின்றார்.**

**எப்படியாவது மனக்குலத்தை மீட்டாக வேண்டும் என்ற உறுதியுடன் பயணித்தபோது உள்ளம் பிடிவாதத்துடன் நடக்க நினைத்தாலும், உடல் பலவீனப்பட்டதால் இரண்டாம் முறையாக இறைமகன் மண்ணில் விழுந்தார், ஆனால் வீழ்ச்சி என்பதே எழுச்சிக்காகத்தான் என்று "தொடர்ந்து எழுந்து நடந்தார்."**

**தனக்கு எதிராக அறியாமல் செய்யும் தீமைகளைத் தவறு என்றோம். ஆனால் நன்கு தெரிந்து, தனக்குத்தானே செய்து கொள்ளும் தீமைகள் தவறு அல்ல, அவை தப்பு எனப்படும் என்று இந்தத் தமிழ்ச்சமூகம் கூறுகின்றது. இது தண்டனைக்கும் - மன்னிப்புக்கும் உட்பட்டது. நன்கு தெரிந்தும் ; திருந்தாத இந்த மனிதனுக்காக அவனது மீட்புக்காக இயேசு மேற்கொண்ட நடை பயணம் அவரை இரண்டாம் முறை கீழே வீழ்த்தியது .**

**நீ இன்று மறுதலிப்பாய் என்ற எச்சரிக்கை வார்த்தைகளுக்குப் பின்பும் ; பேதுரு தன்னைக் காத்துக்கொள்ள இறைமகனை மறுதலித்து - வேதனை அடைந்ததார்.**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா என்கிறது தமிழ். நாம், நமக்கு நன்கு தெரிந்தபோதும் உடலுக்கு ஆகாத உணவை விரும்பி உண்டு, உண்டாகும் உடல் நோயைப் போக்க மருத்துவரைத் தேடுகிறோம்; அவர் கைவிட்டால் நலம் வேண்டி இறைவனிடம் நாளும் புலம்பித் தவிக்கின்றோம: இதேபோல் இறைவனோடு நமது உள்ளம் கொண்டுள்ள உன்னத உறவை, சுயநலம் கொண்ட நமது விருப்பங்களுக்காகத் தனி மனிதன், மற்றும் சமூக தர்ம ஒழுக்கங்களை தகர்த்து எறியும்போது ஊக்கமுள்ள நமது ஆன்மாவும் உடைந்து போகின்றது.**

**எனவே , வீழ்ச்சியிலிருந்து எழுந்திட இயேசு....... " உங்கள் மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" (மத்தேயு : 26:41) என்று நமது நிலையை அறிந்தவராக அதிலிருந்து மீண்டும் எழுந்து பயணிக்க இறை வேண்டலைத் தொடருங்கள் என்று கூறுகின்றார்.**

**1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, நமது விருப்பு, வெறுப்புகள் எவ்வாறு நமது உடலையும் ஆன்மாவையும் கட்டுப்படுத்துகின்றன என்பதை யோசிப்போம்**

**செபம்:- இறைவா வீழ்வதும் ஒருவகையில் எழுவதற்கு தான் என்று புரிந்து கொண்டோம். எங்கள் எழுச்சி நிலைத்திட உடலும் உள்ளமும் ஊக்கமும் ஆற்றலும் பெற்றிட எங்கள் வேண்டலை உம்முன் வைக்கின்றோம்; அருள் புரியும்**

**உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக நாங்கள் மாறிட அருள்தாரும்.**

8ம் நிலை……. திவ்ய இயேசுவே…..

ஒரு ஆறுதல் ….அனைவருக்கும் தேவை
எருசலேம் நகர பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகின்றார்……

பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள்.(லூக்கா 23:27 இறை சித்தத்தை அறியாமல், தனக்கு இந்தக் கொடிய துன்பம் நிறைவேறக் கூடாது என்று அழும் அந்தப் பெண்களிடம். "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழ வேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். (லூக்கா 23:28) என்று அவர்களுடைய வருங்கால நலனுக்கு, மரண வாயிலில் நிற்கும் இயேசு, வழி கூறினார்.

இன்றைய இயந்திர வாழ்க்கையில் நாம் அனைத்திற்கும் உடனடித்தீர்வைத் தேடுகின்றோம் நல்லது. அன்று, ஒரே ஒரு முறை இயேசுவிற்காக அழுத எருசலேம் நகர பெண்களிடம் “எனக்காக அழ வேண்டாம்” என்ற உடனடித் தீர்வு இயேசுவால் உடனே கொடுக்கப்பட்டது. இன்று இயேசுவின் முன் பல நாட்கள், பலமுறை மன்றாடியும் நாம் விரும்பும் நமக்கான இந்த உடனடித் தீர்வுகள் நமக்கு வழங்கப்படுகின்றதா? இல்லை எனில் காரணம் என்ன?...

இயேசு. உன்னைப் போல் உன் அயலான நேசி என்று அவர் கூறியதை நினைவு படுத்துகின்றார். எருசலேம் நகர பெண்களைப் போல் ஒட்டோ- உறவோ இல்லாத இயேசுவிற்காக - ஒரு மனிதனுக்காக - துன்பங்களின் மத்தியில் பயணிக்கும் அயலானுக்காக அழத்தொடங்கினால் நமக்கும் உடனடித் தீர்வு சாத்தியமே .

முயற்சித்துத்தான் பார்ப்போமே!. காலமெல்லாம் இன்று வரை; நமது விருப்பப்படி நமது தேவைகளுக்காக மன்றாடினோம் தீர்வு கிடைக்கவில்லை. ஆகையால் எருசலேம் பெண்களைப் போலத் துன்புறும் இயேசுவிற்காக ஒப்பாரி வேண்டாம் - துன்பங்களின் மத்தியில் பயணிக்கும் அயலானுக்காக ஜெபித்துப் பார்ப்போம் -இயேசுவின் முன் நிச்சயம் நமது வினாக்களுக்கும் விடைகள் உண்டு. இயேசு தெளிவாக அவருக்காக அழ வேண்டாம் என்று மீண்டும் கூறுகின்றார். யாருக்காக அழ வேண்டும் என்பதையும் அடையாளப்படுத்தி விட்டார். கண்களைத் திறப்போம் அயலானைக் கண்டு மகிழ்வோம்.

1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக, அழுவதால் பயனில்லை ஆறுதலாலும் அரவணைப்பாலும் மட்டுமே; ஆதாயமும் அமைதியும் உண்டு என்பதை உணர்வோம்.

செபம்:- ஆறுதலின் தெய்வமே இறைவா, அன்பையும் அரவணைப்பையும் அள்ளிப் பருக ஆசைப்படும் நாங்கள்; முதலில் அனைவரோடும் அவைகளை பகிர்ந்து பருகிட எங்களை வழி நடத்தும்.

உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.

9ம் நிலை..... திவ்ய இயேசுவே.....

ஒரு குற்றம்... ஏற்றுக்கொள்ள முடியாதது ... திரும்பி வா
இயேசு மூன்றாம் முறை கீழே விழுகின்றார்

பிலாத்து... மூன்றாம்முறையாக அவர்களை நோக்கி, "இவன் செய்த குற்றம் என்ன? மரணதண்டனைக்குரிய குற்றம் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்" என்றான். (லூக்கா23:22) ஆனால் பிலாத்து நம்மைப் போல் தன் வார்த்தையைக் காப்பாற்றாமல் தன்பதவியை காத்துக் கொண்டதால், சிலுவைப் பயணத்தில் இயேசு மூன்றாம் முறையாகக் கழே விழுந்தார்.

இயேசுவின் வீழ்ச்சிகள் நமது வாழ்க்கைப் பயணத்தின் வீழ்ச்சிகளை ஆராய்ந்து அதனை விட்டு விலகி ; எழுச்சியோடு விண்ணகம் நோக்கிப் பயணிக்க இங்கு, நம்முன் நிறுத்தப்படுகின்றன. நாம் சிறுவர்களாக இருந்தபோது ஞான வகுப்பில் அற்பப்பாவம், பாவம், சாவானபாவம்....என்று மூன்று வகை பாவங்கள் (வீழ்ச்சிகள்) கற்றுத் தரப்பட்டது. நாம் அறியாமல் செய்தவை அற்ப பாவம் (தவறுகள்) என்றும்;....
நாம்... நன்கு அறிந்து நமக்கு எதிராக ...நம் அயலான் (சமூகம்) நமக்கு இடித்துரைக்கும் வகைக்கு நாம் செய்பவை - பாவங்கள் (தப்புகள்) என்றும் அறிந்தோம். இப்போது மூன்றாவது வீழ்ச்சியில், நம்மை நல்வழிப்படுத்த எடுத்துரைத்த அயலானையும் (மனித சமூகத்தையும்) நம்மையும் - துன்பத்தில் மூழ்கடிக்கும் செயலைச் செய்வது சாவான பாவம் (குற்றம்) என்று அறிந்து கொள்வோம். இந்தக் குற்றம் விசாரணைக்கும் தண்டனைக்கும் உரியது.

“ஒருவர் தமக்கு அடுத்திருப்பவர்க்கு எதிராகப் பாவம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ” இந்தக் கோவிலில் உமது பீடத்தின் முன் ஆணையிடுமாறு கொண்டு வரப்பட்டால், விண்ணிலிருந்து நீர் அதைக் கேட்டுச் செயல்பட்டு உமது அடியாருக்குத் தீர்ப்பு வழங்குவீராக! என்கிறது திருவிவிலியம்.(1அரசர் 8:31) அதே திருவிவிலியத்தில் இயேசுபிரான் “எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா " ... என்றும் சொல்கிறார். (யோவான் 20:23).

நமது மூதாதையரின் வழிநடந்து, நாமும் குற்றம் புரிந்தோம்; (திருபாடல் 106) என்பதை ஏற்றுக் கொள்வோம். நாம் மண்ணில் மகிழ்ந்திருக்க, திருஅவை அருளும் ஒப்பற்ற ஒப்புரவு திருவருட்ச சாதனத்தை மன மாற்றத்துடன் ஏற்றுக்கொள்வோம் , உலகில் குற்றங்கள் இல்லாத மனிதம் மலர மனமாற்றமும் மன்னிப்பும் தேவை.

1/2நிமிடம் கண்களை மூடுவோம், மௌனமாக ஒப்புரவு திருவருட்ச சாதனத்தை ; நானே உண்மை என்றவர் வழி ஏற்றுக்கொள்ள முன் வருவோம்.

செபம்:- இறைவா, என்னையும் எம் அயலானையும் நீவீர் மன்னிப்பீராக.

உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.

**10 ம் நிலை ...... திவ்ய இயேசுவே**

**இறைசாயல் எனும் ஒரு ஆடை. ......**
**இயேசுவின் ஆடைகள் அகற்றப்படுகின்றன**

ஆடையற்றவன் அரை மனிதன் என்பது தமிழ் மொழி. பிலாத்துவால் காலையில் இதோமனிதன் என்று முழு மனிதனாக அடையாளப் படுத்தப்பட்டவர், அடுத்த சில மணி நேரங்களில் அவருடைய படைவீரர்களால் அரை மனிதன் ஆக்கப்பட்டார். உடலின் ஆடைகள் அகற்றப்பட்டு வெற்றுடம்புடன் வெறுமையாக நிறுத்தப்பட்டார்.

அன்று முதல் மனிதன் பாவத்தில் விழுந்தபோது தன்னுடைய ஆடையற்ற நிலையை உணர்ந்தான். இன்று மனுக்குலத்தை பாவம் அற்ற நிலைக்கு உயர்த்திட இயேசு தனது ஆடைகளை- இறைசாயலை இழந்தார். எப்போது நாம் உலகின் ஆடைகளான பணம், பதவி, அந்தஸ்து, கௌரவம், ஜாதி ஆகியவற்றை இழந்து வெறுமை அடைகின்றோமோ! அன்று தொடக்கநூல் 2:25 கூறுவது போல் இறைவன் முன் இறைவனோடு நமது வெறுமையையும், வேற்றுமையையும் உணராதவர்களாக மகிழ்ந்திருப்போம் - என்பதை நினைவு கொள்வோம்.

"கண்தான் உடலுக்கு விளக்கு. கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும் என்கிறார் இயேசு.(மத்தேயு 6:22). பிறருடைய உடல் -மனம் ஆகியவற்றின் அந்தரங்கத்தை - நிர்வாணத்தை நமக்கும் பிறருக்கும் எட்டிப் பார்க்க உதவுவது இந்தக் கண்கள்தான். கண்களை இருளில் அலைய விடாமல் நாளும் : இயேசுவின் ஒளியோடு திறக்கத் திண்ணம் கொள்வோம் -

இயேசு வெறுமை அடைந்தார், உலகை வென்று முடித்தார். நாமும் வெறுமை அடைவோம். வெறுமையான இடத்தில் காற்று இடம் பெயர்ந்து நிரப்புவது போல - தூய ஆவியின் கனிகள் நமக்குள் இடம்பெயர்ந்து நிறைந்திட நமது வெறுமை இன்று இடம் தரட்டும். இயேசுவால், இயேசுவுக்குள் நானும் நீங்களும் நமது ஒன்றும் இல்லாத நிலையிலும் வெறுமையிலும் உயர்ந்து ஒளி வீசிட முடியும் என்பதை உலகிற்கு உணர்த்திடச் செய்வோம்.

1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக இயேசு ஆடையை இழந்தது போல் இனி இந்தத் தவக்காலம் முதல் பாவத்தை இழந்தவர்களாகப் பயணிக்க முடிவு செய்வோம். பாவத்தைத் தவிற்போம். இறைசாயல் என்ற அழகு ஆடை அணிவோம்.

செபம்:- ஒன்றும் இல்லாமையிலிருந்து எம்மை உருவாக்கிய இறைவா, உலகில் எமது கண்கள் இருளை அகற்றி - உலகின் ஒளி என்ற உம்மால் பார்வை பெற்றிட மனம் இறங்கும்.

உலகிற்கு உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.

**11 ம் நிலை..... திவ்ய இயேசுவே**

**ஒரு இணைப்பு.... என்னோடும் - உன்னோடும் .**
**இயேசுவை ஆணிகளால் சிலுவையுடன் இணைக்கின்றார்கள்.**

**இயேசுவை சிலுவையில் மூன்று ஆணிகளால் அறைந்தார்கள். இன்றும் இச்செய்தியை காதில் கேட்கும்போது மனம் வேதனை அடைகின்றது.**

**இயேசுவை ஏன் சிலுவையில் அறைந்தார்கள்? நம் பாவங்களுக்காகவா சரி, அப்படி என்றால் இன்று உலகில் பாவம் இல்லையா? பதில் : பாவம் இருக்கிறது என்றால் அவர் சிலுவையில் அறையப்பட்டதற்கு அர்த்தம் இல்லை. மாறாக, பாவம் உலகில் இல்லை என்றால் இது போன்ற தவக்காலம் இனித் தேவை இல்லை. ..... அப்படித்தானே. !!! நன்கு கவனியுங்கள்...**

**இந்த இரண்டு வாதங்களுக்கும், பதில் ஒன்றுதான். அதுதான் இறை சித்தம்.**
**இறை சித்தம் என்ன என்று கேட்டால்........ இயேசு மறுமொழியாக, முதலாவதாக :- "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. அடுத்து இரண்டாவதாக :- உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"(லூக்கா 10:27) என்பதே மனிதன் கடைபிடிக்க வேண்டிய இறை சித்தம் என்றார். மேலும் இதைவிட எளிமையாக இறை சித்தத்தை நமக்குக் கொடுக்க முடியவில்லையே என்று வருத்தமும் படுகிறார்.**

**மனுக் குலத்தின் மீது இறை சித்தமாக இருக்கும் இந்த இரண்டு கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் குற்றங்குறைகள் ஏற்படும்போது; அது தரும் வேதனையின் அடையாளமே இந்தச் சிலுவையில் இயேசு அறையப்படும் காட்சி.**

**இனி, காட்சிகள் காட்சிகளாகவே இருக்கட்டும். நம்முள் இறை சித்தத்தை மீறும் நிகழ்வுகள்; உயிர் பெறாமல் இருக்கட்டும். அதாவது இறை சித்தத்திற்கு எதிராக வாழ்வது ; நாமே இயேசுவை மீண்டும் சிலுவையில் அறைவதற்க்கு சமம் என்பதை நாம் புரிந்து கொள்வோம்.**

**“ஆறறிவு கொண்ட மனிதர்கள் நாம்”, எனவே யாரையும் அதாவது இயேசுவையும் சரி, மனிதர்களையும் சரி, மீண்டும் துன்பத்திற்கு ஆளாக்கமாட்டோம் என்பதில் கவனமாக இருப்போம்.**

**1/2நிமிடம் கண்களை மூடுவோம். மௌனமாக இறை சித்தம் எனும் சிலுவையில் மனிதனாக மனித நேயத்தால் உறுதியுடன் இணைவோம்.**

**செபம்:- இறைவா இறை சித்தம் எங்கள் வாழ்வு என்று புரிந்து கொண்டோம்.... எங்களை ஏற்றுக்கொள்ளும்.**

**உம்மைப் பிரதிபலிக்கும் மனிதர்களாக வாழ அருள் தாரும்.**

12 ம் நிலை... திவ்ய இயேசுவே.....

ஒரு முடிவு .... அவராக எடுத்தது
இயேசு தனது வாழ்வை முடித்துக் கொள்கிறார்

இயேசு, கல்வாரியில் சிலுவை மரத்தில் அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்.(யோவான் 19:30) தனது வாழ்வை முடித்துக் கொள்கிறார்......

யார் கூற முடியும்?.. "எல்லாம் நிறைவேறிற்று" என்று - அதுவும் "மரண விளிம்பில்" நிற்கும்போது... அனைவரும் பயத்தில் உறைந்து போகும் நேரமது. ஆனால் முடிவாகத் தன்னை நம்பி வந்த அன்னைக்கும் - சீடனுக்கும் புது உறவையும்; - தமக்கு தீமையே செய்த அனைவருக்கும் மன்னிப்பையும்; இயேசு தந்தார் ?... ஏன் - மரணத்திற்கு பின்தன் விலாவைக் குத்தித் திறந்த போர் வீரனுக்கும் நன்மையைக் காண பார்வை தந்தார். காரணம் ... தனது படைப்பு, பிறப்பு, வளர்ச்சி, வாழ்வு என அனைத்து நிலைகளிலும் தன் கடமைகளை எவர் ஒருவர் முற்றிலும் முழுமையாக நிறைவேற்றுகின்றாரோ அவரால் மட்டுமே எல்லாம் நிறைவேறிற்று என்று கூற முடியும்; - இயேசு கூறினார்.

நிறைவேறியது என்பது "நீட்சியின்(extension)" குறியீடு. இது முடிவல்ல ஒரு ஆரம்பம் என்று பொருள்படுவது. ஆம்... ஒரு புதிய சரித்திரத்தின் உறுதிமொழி...! " இயேசு கல்வாரியின் அன்பை - நம்மைப் பகிர்ந்துண்டு, பாரில் படைத்திட பாங்காய் அழைப்பு விடுக்கின்றார். ஆனால் நாமோ பள்ளியில் தேர்வு எழுத அழைப்புச்சீட்டு பெற்றபின் எனக்கு ஒன்றும் தெரியாது மீண்டும் படிக்க வேண்டும் எனக் கூறும் மாணவன் போல, தினமும் இயேசுவின் முன் எதிர்பார்ப்புகளுடன் - ஏக்கமுடன் நிற்கிறோம். எத்தனை முறை சொல்லிக் கொடுப்பது என்று அவர் கேட்டால் நீர் அல்லவோ எழு - எழுபது முறை என்று கூறினீர் என்று, பதிலும் கூறுகின்றோம்...

மனிதமே விழித்துக்கொள். ஆண்டவரின் மரணத்திற்காகத் துக்கம் கொண்டாடும் நேரமல்ல இது. " அகரமும் னகரமும் நானே" என்பவருக்கு முடிவேது?. அவர் நிறைவேற்றியதை நாம் தொடர வேண்டிய நேரமிது எதையும் செய்யாமல் இருந்த, ஒரு தாலந்து பெற்றவனின் நிலைமை நமக்குத் தெரியும். கவனம், இன்று வரை நாம் பெற்றுக் கொண்ட தாலந்துகளை கணக்கிட முடியுமா?... முடியும் அவைகளை எத்தனை பேருக்குப் பகிர்ந்தோம் என்ற எண்ணிக்கை வழியாக. மரணத்திலும் - மன்னிப்பை அனைவருடன் பகிர்ந்தவரின் சீடர்கள், எனில் எழுவோம் பகிர்வோம் இயேசுவின் அன்பை...
இது முடிவல்ல ஆரம்பம் என்று.

1/2நிமிடம் கண்களை மூடுவோம், மௌனமாக முழந்தாள்படி இடுவோம் ...

செபம்:- வானகத்தில் உள்ள எம்தந்தாய் என்று.... தொடர்ந்து பாடுவோம்.

**13 ம் நிலை.... திவ்ய இயேசுவே.....**

**ஒரு தாயின் பரிதவிப்பு**
**இயேசுவின் திருவுடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு**
**மரியாவின் மடியில் வளர்த்தப்படுதல்**

**கருவாய், குழந்தையாய் என் மடியில் தவழ்ந்த இயேசுவை - என் மகனை இதோ, உயிரற்ற உடலாய் அதே என் மடியில் வளர்த்தப்பட வேண்டும் என்ற முடிவில் என் மடியில் வைத்துவிட்டீர்களே? எங்குச் செல்கிறீர்கள்? இது என்ன நியாயம்? என, அன்னை மரியா கேட்கின்றார்.**

**இந்த நிலைக்கு ஆளாக நானும் என் மகனும் செய்த குற்றம் என்ன? என் மகன் - உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (லூக்கா10:27) என்று கூறினார். எனவே, நானே வாழ்வு என்று வாழ்வாகவே வந்த அவர்... உங்களையும் வாழ்ந்திடத் தானே கூறினார். அவரைக் காப்பாற்ற வாய்ப்பு இருந்தும்; சிலுவை மரணத்திற்கு உங்கள் கூக்குரலால் கை நெகிழ்ந்து விட்டீர்களே... நியாயமா.... ?**

**எனது நிலையைக் கவனித்தீர்களா?.. உங்களிடம் நான் என்ன கூறினேன்? - "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவான்2:5) என்று கூறினேன். திராட்சை ரசம் வேண்டும் என்றபோது என் வார்த்தையைக் கேட்டு, அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்த நீங்கள்; அதே திராட்சைரசம் அடுத்தவருக்கும் தேவை என்பதால் திராட்சைக் கொடியாக வளர்ந்து நற்கனிகளை கொடுங்கள் என்று என் மகன் சொன்னதற்காகவா எங்கள் இருவரையும் இந்த நிலைக்கு ஆளாக்கினீர்கள்.....**

**போகட்டும்; நடந்தது நடந்து விட்டது. இனி நடக்கப் போவதைக் கவனிப்போம். ஒருவிதை வளர்வதற்கு இடமும் அதைப் பராமரித்து வளர்க்க விதைத்தவனின் கவனிப்பும் தேவை. என்ன செய்ய? "இயேசுவின் திருவுடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு மரியாவின் வளர்த்தப்பட வேண்டும்" என்ற முடிவிற்கு நீங்கள் வந்து விட்டீர்கள். துக்கம் நடந்த வீட்டில் ஒரு நல்லது நடக்க வேண்டும் என்பது தமிழ் மரபு.**

**வார்த்தையாகிய என் மகனை விதையாக்கி, வளர்த்திட நிலமாக என் மடிமீதும் வைத்து விட்டீர்கள். சரி... வளர்ப்பது யார்?.. செடி வைத்தவர் தானே தண்ணீர் ஊற்ற வேண்டும்! ஊற்றுங்கள் வாழ்வு தரும் தண்ணீரை (யோவான் 4:10) அவரும் வளர்ந்து அவரில் நீங்களும் வாழ்ந்திட மாற்கு 14: 22-24ன் படி, இரவு உணவின் வழிநடத்தல்படி அவரையே உங்கள் உணவாக, அப்பமும் ரசமுமாக; பெற்று திடம்கொள்ள அழைக்கின்றேன். அவருக்கு மட்டுமல்ல உங்களுக்கும் தாயான எனது பரிதவிப்பை புரிந்து கொள்ளுங்கள். மீண்டும் கூறுகின்றேன் "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" ஏனெனில்... (யோவான் 2:5) உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.**

**1/2நிமிடம் கண்களைமூடுவோம் அன்னையின் நியாயத்தை புரிந்து கொள்வோம்**

**செபம்:- புனித மரியே இறைவனின் தாயே...**

**14ம் நிலை ... திவ்ய இயேசுவே...**

**அன்றைய ஒரு முடிவு - இன்று ஒரு சரித்திரம் .**
**ஆண்டவர் இயேசு அடக்கம் பண்ணப்படுகின்றார்.**

**அன்று ஆயத்த நாள்; ஓய்வுநாளின் தொடக்கம். யூதர்களின் தலைமைச் சங்கத் தீர்ப்புப்படி கொடியவர்களுள் கொடியவராக ஒரு சிலுவை மரணக் குற்றவாளியான... இயேசுவின் - உடல் - சிதைக்கப்படாமல் எலும்புகள் - முறிக்கப்படாமல் ஆளுநர் பிலாத்துவின் அனுமதியோடு யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் மெல்லிய துணிகளால் சுற்றிக் கட்டப்பட்டு, யாரும் அடக்கம் செய்யப்படாத; புதிய கல்லறை ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டது.**
**இந்த இயேசு - மக்களால் போதகர், தலைமைச் சங்கத்தால் கலிலேயன், ஆளுநர் பிலாத்துவால் "இதோ மனிதன்" என்று அடையாளப் படுத்தப்பட்டு சிலுவையில் யூதர்களின் அரசன் என்று பட்டயம் கட்டப்பட்ட நசரேத் ஊர் மரியாவின் மகன். யார் இதைச் செய்தார்கள்.?. எப்படிச் செய்தார்கள்?**
**முழுமையான அன்பு பயத்தைப் புறம் தள்ளும்" (1யோவான் 4:18) என்ற வார்த்தைக்கு ஏற்பக் கல்வாரியில் - உலகின் அதிகாரம், அந்தஸ்து, ஆகியவைகளை தக்கவைக்க தங்களோடு இருந்த சுயநல அழுக்குகளை, பயத்தை; தூக்கி எறிந்தவர்களாக; யூத தலைமைச் சங்கத்தின் உறுப்பினர்களான அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பும், நிக்கதேம் என்ற பரிசேயரும் இறந்துவிட்ட இயேசுவின் உடலை "மனிதநேய உணர்வுடன்" அடக்கம் செய்தனர்.**
**இந்த நிகழ்வில் மூன்று வகை மனிதர்களைக் காண்கிறோம்**
**1) இறந்துவிட்ட இயேசு**
**2) துக்கத்தில் மூழ்கிய அவருடைய உறவினர்கள்**
**3) உண்மையாகவே இயேசுவின் அயலானாக வந்து அடக்கத்தை யூத முறைப்படி கௌரவமாக முடித்துக் கொடுத்த - அந்த யூதர் தலைமை சங்க உறுப்பினரிருவர்.**
**நாம் இப்போது யோசிக்கவும், நமது நிலையை ஏற்று, வாழ்ந்து காட்ட நாளை என்ற சொல்லுக்கு இடம் இல்லாமல் கல்லறை முன் நிற்கின்றோம். உண்மையில் இந்த மூன்று வகை மனிதரில் நாம் எந்த வகை?**
**முதல் வகை என்றால் சாகாமல், நானே வாழ்வு என்றவரின் வாழ்வை... வாழ்ந்தால் நமது முடிவு பிறருக்கு அன்பின் அடையாளமாகவும் இறை நம்பிக்கையின் ஊற்றாகவும் இருக்கும். மூன்றாம் வகை என்றால் ஆறுதலைத் தேடுபவருக்கு அரவணைக்கும் கைகளானால் உலகம் நம்மை அயலானாக வாழ்கின்ற கிறிஸ்துவாகக் கௌரவிக்கும். இல்லை.. இல்லை... நாங்கள் இரண்டாம் வகை தான் என்றால் நம்மைவிடச் சுயநலவாதிகள் உலகில் வேறு யாரும் இல்லை என்பதை நாம் மறுக்கவும் முடியாது. நமது இன்றைய நிலை...**

**"நான் - நீ - இறைவன் என்ற முக்கோண நட்பின் பரிமாணச் சுழற்சியில்**
**1) நானாக மட்டும் வாழும் சுயநலவாதியா?**
**2) நீ என்று என்னை நேசிக்கும் அயலானா?**
**3) அல்லது நான் நீ என்று இரு கரம் கோர்த்து இறைதனில் இணைந்து மறு கிறிஸ்துவாக வாழும் மனிதனா? முடிவும், முயற்சியும் நம் கைகளில்...**

**பொறுத்தருளும் கர்த்தாவே பொறுத்தருளும்.**